உ

கடவுள் துணை.

இவை

திருவருட்பிரகாசவள்ளலார்

என்னும்

சிதம்பரம்

இராமலிங்கம்பிள்ளையவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

நடராஜபதிசற்குருமணிமாலை.

சிவகாமியம்மன்பேரில் அருட்பத்து.

இவைகளடங்கியிருக்கின்றது

ச. ா. வரதராஜப்பிள்ளையவர்களால்

விவேகவிளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சித்திரபானு ௵

அருட்பெருஞ்சோதி

திருவருட்பிரகாசவள்ளலார்

திருவாய்மலர்ந்தருளிய

[illegible]

சற்குருமணிமாலை

வெண்பா

என்னறிவா மென்னறிவி னின்பமா மென்னறிவின்
றன்னறிவா முண்மைத் தனிநிலையாம் மன்றுகொடிச்
சோலையிட்டான் வாழச்சிவகாமசுந்தரியை
மாலையிட்டான் பாதமலர்.

அறுசீர்க்கழிநெடில் விருத்தம்

மாற்றறியாதசெழும்பசும்பொன்னே மாணிக்கமேசு டர்வண்ணக்கொழுந்தே, கூற்றறியாத பெருந்தவருள்ளக் கோயிலிருந்த குணப்பெருங்குன்றே வேற்றறியாத சிற்றம்பலக்கனியே விச்சையில்வல்லவர்மெச்ச விருந்தே சாற்றறியாதவன்சாற்றுங்கனித்தான் தனிநடராஜவென் சற்குருமணியே. (௧)

கற்கலையும்படி கரைவிக்குங்கருத்தே கண்மணியே
மணிகலந்தகண்ணொளியே, சொற்கலையின் றியவொளி
யினுள்ளொளியே துரியமுங்கடந்திட்டபெரியசெம்பொ
ருளே, சிற்கலை திரையது திருவருட் கடலே தெள்ளமுதே
கனியேசெழும்பாகே, சர்க்கரையே யதுசார்ந்தசெந்தே
னே தனிநடராஜவென் சற்குருமணியே. (௨)

என்னுயிரே யெனதுயிர்க்குயிரே யென்னறிவே யெ
னதறிவினுக்கறிவே, அன்னையினினிய வென்னம்பலத்த
முதே வற்புதமே பதமே யெனதன்பே, பொன்னிணையடி
மலர்முடிமிசைப் பொருந்தப்பொருத்திய தயவுடைப்பு
ண்ணியப்பொருளே, தன்னியலறிவருஞ்சத்தியநிலையே த
னிநடராஜவென் சற்குருமணியே. (௩)

காய்மனக்கடையனைக்காத்த மெய்ப்பொருளே கலைக
ளெங்கருதருமொறு பெரும்பதியே, தேய்மதிச் சடைமரு
க்குரியவொன்கடோணித்தெய்வமெல்லமேதார்சத்திய முத
லே, தூய்மதிப்பெரியருள்ளமர்ந்தசிற்பரமே யம்பலத்தா
டல்செய்செம்பதத்தரசே, தாய்மதிப் பரியதோர் தயவு
டைச்சிவமே தனிநடராஜவென்சற்குருமணியே. (௪)
உருவமுமருவமுமுபயமுமானதாயுளதிலதாமொ
ளிபொருதனிமுதலே, கருவிலியெனக்கருள்கனித் தனி

த்தவனே கண்ணுடையாய்ப்பெருங்கடவுளர்பதியே, நிருநிலைபெறவெனைவளர்க்கின்ற பரமேசிவகுருநாயகநிற்றெளியனுபவமே, தருவளர்பொழில்வடற்சபை நிறையொளியேதனிநடராஜவென்சற்குருமணியே (௫)

ஆறந்தநிலைகளினனுபவ நிறைவே யதுவைதவொளிர்பொதுவுறுநிதியே, கூறொந்தநிலைகளுமொருநிலை யெனவே கூறியென்னுள்ளத்திற் குலவியகளிப்பே, பேறிந்தநெறியெனக்காட்டியென்றனையே பெறுநெறிக் கேற்றியவொருபெரும்பொருளே, சாறெந்தநாள்களும் விளங்குமோர்வடல்வாய்த் தனிநடராஜவென்சற்குருமணியே.()

சாகாதகலையிதுவேகாதகாலாந்தரமிதுகாணெனத் தயவுசெய்துரைத்தே,போகாதபுனலையுந்தெரிவித் தென்னுள்ளத்தே பொற்புறவமர்ந்ததோரற்புதச்சுடரோ,ஆகாதபேர்களுக்காகாதவினைவேயாகியவெனக்கென்று மாகியசுகமே,தாகாதலெனத்தருந்தருமசத்திரமே தனிநடராஜவென்சற்குருமணியே. (எ)

தத்துவமசிநிலையிதுவிதுதானேசத்தியங்காணெனத்தனித்துரைத்தெனக்கே,எத்துவந்தனைகளுநீக்கிமெய் நிங்

லைக்கே யேற்றிகாணிறவாத வியலளித்தருளார்,சித்துவங் துலகங்களைவற்றினுமாடச் செய்வித்தபேருஞ் சிவபர ஞ்சுடரே,சத்துவநெறிதருவடலருட் கடலேதனிநடராஜ வென்சற்குருமணியே. (௮)

இருபதுவிருதுபொருளிதுககமடைவா யிருவழியென வெணக்கியல்புறவுரைத்தே,யிதுவமுறுதொடுசெவ்வேமுறுமுறு மளித்தே மேயிலைக்கேற்றியமெய்ந்நிலைச்சுடரே,பொரு நடமிக்கின்ற புண்ணியப்பொருளே புரையுறுமுளத்தி னைடப்பொருப்பெமருந்தே,சதுமறைமுடிகளின் முடிவு றாசிவமே தனிநடராஜவென்சற்குருமணியே. (௯)

என்னிலையிது வென்னிலையிதுவா மிருநிலைகளு மொருநிலையெனவறிவாய், முன்னிலைநிறுத்தினிதுமயலு றலாம் முன்னிலை பின்னிலை முழுநிலையுளவாம்,இந்நி லையறிந்தவனை முந்நிலைகடந்த வியநிலையடைகவென்றி யம்பியபரமே, தன்னிலையாகியதன்னிலையரசே தனிநட ராஜவென்சற்குருமணியே. (௰)

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்

சிவகாமியம்மை பேரில்

அருட்பத்து.

அறுசீர்க்கழிநெடில் விருத்தம்

ஜோதிக்கொடியே யானந்தச் சொரூபக்கொடியே ஜோதியுருப் பாதிக்கொடியே ஜோதிவிடப் பாகக்கொடியே யெனையீன்ற, ஆதிக்கொடியே யுலகுகட்டி யாளுங்கொடியே சன்மார்க்க, நீதிக்கொடியே சிவகாமநிமலக்கொடியே யருளுகவே. (௧)

பொருணற்கொடியே மாற்றுயர்ந்த பொன்னங்கொடியே போதாந்த, வருணைக்கொடியே யெல்லாஞ் செய்வல்லாரிடஞ் சேர்மணிக்கொடியே, தருணைக்கொடியே யென்னைத் தாங்கியோங்குங் கனிக்கொடியே, கருணைக்கொடியே ஞானசிவ காமக்கொடியே யருளுகவே. (௨)

நீட்டுக்கொடியே சன்மார்க்க நீதிக்கொடியே சிவகீதம், பாட்டுக்கொடியே யிறைவரிடப் பாகக்கொடியே பரநாத. நாட்டுக்கொடியேயெனையீன்ற ஞானக்கொடியேயென்னுறவாங், கூட்டுக்கொடியேசிவ காமக்கொடியே யடியேற்கருளுகவே. (௩)

மாலக்கொடியேன் குற்றமெலாமன்னித்தருளிமாணமெனுஞ், ஜாலக்கொடியை யொடித்தெனக்குட் சார்ந்து விளங்குந் தவக்கொடியே, காலக்கருவைக் கடந்தொளிர்வான் கருவுங்கடந்து வயங்குகின்ற, கோலக்கொடியேசிவஞானக் கொடியேயடியேற்கருளுகவே. (ச)

நாடாக்கொடிய மனமடக்கி நல்லமனத்தைத்தக்களிவித்துப், பாடாப்பிறையைப் பொறுத்தெனக்குப் பதமீந்தாண்ட பதிக்கொடியே, தேடாக்கருமச்சித்தியெலாந் திகழத்தயவாற் றெரிவித்த, கோடாக்கொடியே சிவகருமக்கொடியே யடியேற்கருளுகவே. (ரு)

மணங்கொள்கொடிப்பூ முதலைங்குவளைப்பூவடிவுள் வயங்குகின்ற, வணங்கொள்கொடியே யைம்பூவும் மவிய மலர்த்த வாண்கொடியே, கணங்கொள்யோக சித்தியெலாங்காட்டுங்கொடியே கலங்காத, குணங்கொள்கொடியே சிவயோகக்கொடியேயடியேற்கருளுகவே. (சா)

புலங்கொள்கொடிய மனம்போனப் போக்கிற்போகாதெனைமீட்டு, நலங்கொள்குருவைச்சன்மார்க்கநாட்டில் விடுத்த நற்கொடியே, வலங்கொள்ஞான சித்தியெலாம் வயங்கவிளங்கு மணிமன்றிற், குலங்கொள்கொடியே மெய்ஞ்ஞானக்கொடியேயடியேற்கருளுகவே. (எ)

வெறிக்குஞ்சமயக் குழியில்விழ விரைந்தேன் றன்கே
விழாதவகை,மறிக்குமொருபே ரறிவளித்தவள்ளற் கொ
டியேமனக்கொடியைச், செறிக்கும்பெரியருளத்தோய்
ந் தெய்வக்கொடியே சிவஞானங்,குறிக்குங்கொடியே ய
னந்தக்கொடியேயடியேற்கருளுகவே. (௮

கடுத்தவிடர் வன்பயங்கவலை யெல்லாந்தவிர்த்தக்க
ல்தூள்ளே, அடுத்தகொடியே யருளமுத மளித்தென்
ன்னை யருட்காத்தால்,எடுத்தகொடியேசித்திபெலா மி
தாமகனே யென்றெனக்கே,கொடுத்தகொடியேயானந்த
கொடியேயடியேற்கருளுகவே. (௯

எட்டைசித்தவிர்த்தென்னெண்ணமெலா மெய்தவொ
தந் தியான்வினைந்த,பாட்டைப்புனைந்து பரிசளித்தபா
ஞானப் பதிக்கொடியே,தேட்டைத்தவிப்பே ரருட்செ
ங்கோல் செலுத்துஞ்சுத்த சன்மார்க்கக்,கோட்டைக்கொ
டியே யானந்தக்கொடியேயடியேற் கருளுகவே. (௰

திருச்சிற்றம்பலம்